DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.84/2018

**prosecution witness: LW-2 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபு | பதவி | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| த/பெ. | : | பெருமாள் | வயது | : | 56 |
| ஊர் | : | மதுரை | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>23.02.2026</u>

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது மதுரையில் தமிழ்நாடு மின்சார வாரிய விழிப்பு பணியில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2018ம் ஆண்டு இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியாற்றியும் கடந்த 15.02.2018ம் தேதி மேற்படி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.லோகநாதன் என்பவர் ஒடிசா மாநிலம் மீனாக்காட்டன் மகன் இராஜேந்திரா சுவைன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய குற்ற எண் 31/2018 சட்டப்பிரிவுகள் 279, 304 A இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தார். **(புகார் அ.சா.ஆ.1 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

2. எனது புலன்விசாரணைக்கு வைத்ததை பார்வையிட்டு காலை 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான இராமேஸ்வரம் அயோத்தி காட்டேஜ் முன்பு சென்று வரவழைக்கப்பட்ட சாட்சிகளான ஆரோக்கியநாதன், மரிய ஜெயபாலன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

3. பின்பு இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த விபத்தில் இறந்துபோன இரமாமணி என்பவரது இறந்த பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். (**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பிரேத விசாரணை முடித்து இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதத்தின் மூலம் தலைமை காவலர் 720 முருகன்

அவர்களை அனுப்பிவைத்தேன். பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் இராஜேந்திரா சுவைன், மீனா காட்டன், இராஜகணேஷ், இராதகிருஷ்ணன் நாயர், மணிகண்டன், ஆரோக்கிய நாதன், மரிய ஜெயபாலன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்துபோன ரமாமணி என்பவரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் TN 33 Z 2435 என்ற லாரியை ஓட்டி வந்து வாகன விபத்தை ஏற்படுத்திய ஈரோடு சரவணன் என்பவரை வழக்கு விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிந்ததால் இராமேஸ்வரம் ஜெ.ஜெ.நகர் கார் பார்க்கிங் முன்பு வைத்து 16.30 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க விசாரணைக்கு பின்பு இருநபர் ஜாமினில் விடுவித்தேன்.

4. பின்பு 16.02.2018ம் தேதி இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் TN 33 Z 2435 என்ற லாரி மற்றும் வாகன விபத்தில் சேதமடைந்த டாடா சுமோ TN 28 AB 6674, இனோவா KL 07 BK 9028 ஆகிய வாகனங்களை வேண்டுகோள் கடிதத்தின் மூலம் இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற அனுப்பிவைத்தேன். 12.04.2018ம் தேதி வாகன ஆய்வறிக்கை பெற்றும் சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் இராமநாதபுரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**மேற்சொன்ன 3 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ. 6 முதல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

5. பின்பு 14.06.2018ம் தேதி இந்த வழக்கில் இறந்துபோன நபரின் உடலை பிரேத பரிசோதனை செய்த இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.மீனாகுமாரி அவர்களிடம் சான்று பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் தலைமைக் காவலர் 720 முருகன் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.லோகநாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து இவ்வழக்கின் எதிரி மீது 279, 304A இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து கணம் நீதிமன்றம் அனுப்பிவைத்தேன்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது ஜெ.ஜெ.நகரில் இருந்து கிழமேலாக வந்து திரும்ப தென்வடலாக திரும்பும் இடம் என்றால் சரிதான். பொதுவாக வாகனங்கள் வளைவில் வளையும்போதும் மேட்டிலிருந்து கீழே இறங்கும்போதும் மெதுவாகத்தான் வரும் என்றால் சரிதான். அதுபோல சம்பவ இடம் என்று சொல்லுப்படும் பகுதி வடக்கிலிருந்து தெற்குநோக்கி வரும்போது வடக்கு பகுதி உயரமாகவும் தெற்கு பகுதி சற்று தாழ்வாகவும் இருக்கும் என்றால் சரிதான். எனது

முதல் விசாரணையிலுமம் குற்ற இறுதி அறிக்கையிலும் விசாரணை செய்து வாக்குமூலம் பெறும்போதும் சம்பவம் நடந்த இடம் அயோத்தி காட்டேஜ் முன்பு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வரைபடத்தில் அயோத்தி காட்டேஜ்க்கு தெற்கு பகுதியில் ஜலால் காட்டேஜ் உள்ளது என்றால் சரிதான். ஜாலால் காட்டேஜ்க்கு எதிர்புறம் கோவிந்தம்மாள் பெட்டிக்கடை இருப்பதாக வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பெட்டிக்கடைக்கு அருகில் தான் சம்பவ இடம் உள்ளதாக வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் அயோத்தி காட்டேஜ் எதிர்புறமோ அயோத்தி காட்டேஜ் அருகிலோ சம்பவ இடம் என்று வரைபடத்தில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளரை விசாரணை செய்ததில் பாதிக்கப்பட்ட நபர் ஒடிசாவை சேர்ந்தவர் என்பதால் அந்த புகார் மனுவை எழுதிக்கொடுத்தது யார் என்ற விபரத்தை எனது குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன்.

3. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடைபெற்றதாக தகவல் கிடைக்கப்பட்ட நேரம் 9.00 மணி என்று சொல்லப்படுகிறது என்றால் சரிதான். சார்பு ஆய்வாளரை விசாரணை செய்தபோது சம்பவ நடைபெற்றதாக தகவல் கிடைப்பெற்ற நேரம் காலை 7.45 மணி என்றால் சரிதான். தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. LW1 சாட்சிபட்டியலில் சொல்லப்பட்டுள்ள இராஜேந்திர சுவைன் கொடுத்த வாக்குமூலத்தில் எங்களுக்கு பின்னால் நடந்து வந்துகொண்டிருந்த எனது தாயார் மீது லாரி மோதிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை, சாட்சிகள் விசாரிக்கவில்லை, எதிரி கைது செய்யப்படவில்லை, இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் சம்பவ இடம் எது என்பதே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.23 09:57:30 +0530